# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2021

FWC

புவியியல் - I
Geography - I

Three Hours
Gr. 13 (2021)

22 | T | I

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. புவியியலின் இடம்சார், காலம்சார் தோற்றப்பாடுகளை முன்வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பமுறை
   (1) படம் (2) படிமங்கள் (3) கணினி
   (4) வரைபுகள் (5) புள்ளிவிபர நுட்பங்கள் (…...)

2. தெரிவு செய்யப்பட்ட குறித்ததொரு விடயம் சார்ந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் தனித்தபடம்
   (1) இடவிளக்கப்படம்
   (2) தொலையுணர்வுப்படம்
   (3) பௌதிகஅம்சங்களையுடையபடம்
   (4) கருப்பொருள்படம்
   (5) எண்ணிலக்கப்படம் (…...)

3. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஒரு அம்சத்துடன் சரியான பொருத்தத்தைக் கொண்ட நிறம் மற்றும் குறியீட்டினைக் காட்டும் விடை எது?
   (1) நீர்ப்பாசனக் கால்வாய் - பச்சைநிறத்திலான கோடு
   (2) ஒடுக்கமான புகையிரதப்பாதை – சிவப்பு நிறத்திலான கோடு
   (3) வீட்டுத்தோட்டம் - மஞ்சள் நிறம்
   (4) இறப்பர் - பச்சைநிறப் பின்னணியில் மஞ்சள் புள்ளி
   (5) பாதுகாக்கப்பட்ட வனம் - சிவப்புநிற புள்ளிகள் (…...)

4. பின்வருவனவற்றில் இடம் சாராத தரவு வகைக்கு உதாரணமாகக் கூறக்கூடியது.
   (1) பயிர்ப்பரம்பல் (2) ஒரு நாட்டின் அமைவு (3) வீதிகள்
   (4) நதிகள் (5) உலக சனத்தொகை அளவு (…...)

5. புவியியல் தகவல்முறையில் (GIS) தரவுகள் களஞ்சியப்படுத்தப்படும் முறைகளின் எண்ணிக்கை யாது?
(1) 10 (2) 5 (3) 4 (4) 2 (5) 1 (…...)

6. தொலையுணர்வு தொழில்நுட்பத்தில், வான்வெளி மேடைகளில் தொலையுணர்விற்குரிய உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பது
(1) விமானம், ஹெலிகொப்டர்
(2) அசையும் வாகனத்திலுள்ள தூக்கி, கோபுரம்
(3) சிறியரகவிமானம், கோபுரம்
(4) ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள்
(5) செய்மதிகள், விமானம் (…...)

7. தரவு மூலதாரங்கள் (Data Sources) என்பது
(1) தரவுகளின் பெறுமானங்கள் தொடர்ச்சியான பரம்பலை எடுத்துக்காட்டுவது
(2) ஆய்வாளர் தமது கற்றலுக்குத் தேவையான தரவுகளைப் பெறுகின்ற மூலங்கள்
(3) வரைபுகள், அட்டவணைகள், படங்களை அமைக்கும்போது அவற்றுக்கு அடிப்படையான தரவுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்திய மூலங்கள்
(4) தரவுகளின் பெறுமானங்கள் தொடர்ச்சியான பரம்பலைக் குறித்துக் காட்டுவது.
(5) சேகரிக்கப்பட்ட தரவுகள் ஒழுங்குபடுத்தப்படாமல் மூல வடிவத்தில் காணப்படுவது (…...)

8. ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்களின் எண்ணிக்கை என்பன
(1) பண்புசார் தரவுகள் (2) அளவுசார் தரவுகள்
(3) தொடர்ச்சியற்ற தரவுகள் (4) முதல்நிலைத்தரவுகள்
(5) கூட்டமாக்கப்பட்ட தரவுகள் (…...)

9. நாடு ஒன்றின் எதிர்கால அபிவிருத்திப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் உதவுகின்ற வரைபு எது?
(1) சாதாரண பார் வரைவு (2) வட்டவரைபுகள் (3) சமகணியப்படங்கள்
(4) கூம்பக வரைபு (5) இடக்கணியப்படங்கள் (…...)

10. ஒரு பிரதேச தரைத்தோற்றத்தின் இடரீதியான பரம்பலை அறிந்து கொள்வதற்குப் பயன்படும் படங்கள்
(1) இடவிளக்கப்படம் (2) கருப்பொருள் படம்
(3) எண்ணிலக்கப்படம் (4) இலங்கையின் வீதியமைப்புப்படம்
(5) இலங்கையின் தரைத்தோற்ற வேறுபாட்டுப்படம் (…...)

11. வளிக்கோளத்தின் நான்கு படைகளில் படைமண்டலத்தின் வெப்பநிலை உச்சமட்டத்தில் அதிகரிப்பதற்கான காரணம் யாது?
(1) படைமண்டலத்தின் மேல் எல்லையாக படைத்தரிப்பு எல்லை காணப்படுகின்றது.
(2) படை மண்டலத்தினுள் புவியை நோக்கி வருகின்ற விண்கற்களின் எரிதல் இடம் பெறுவது
(3) படை மண்டலத்தில் காணப்படும் ஓசோன் வாயு
(4) சூரியக் கதிர் புவிமேற்பரப்பை வெப்பமடையச் செய்வதுடன் வளிக்கோளத்தையும் வெப்படையச் செய்கின்றது.
(5) உயரத்திற்கு ஏற்ப வெப்பநிலை வேகமாக உயர்வடைதல். (…...)

12. புவியின் உட்பகுதியில் காணப்படும் கூற்றன் பேர்க் தொடர்ச்சியின்மை பிரித்து வேறாக்குவது
(1) மூடியிலிருந்து ஓட்டினை
(2) சீமாப்படையிலிருந்து சீயல் படையினை
(3) உள்மையத்திலிருந்து வெளிமையத்தை
(4) புவியோட்டினையும் கோளவகத்தினையும்
(5) இடையோட்டினையும் கோளவகத்தையும் (…...)

13. நாஷ்கா சமூத்திரத் தகடும் தென்னமரிக்கக் கண்டத்தகடும் ஒருங்கியதனால் உருவாகிய மலைத்தொடர் எது?
(1) றொக்கி மலைத் தொடர்
(2) அப்பலாச்சியன் மலைத்தொடர்
(3) இமாலய மலைத் தொடர்
(4) அந்தீஸ் மலைத் தொடர்
(5) யூரல் மலைத் தொடர் (…...)

14. பிளவுப் பள்ளத்தாக்கின் பிரதான பகுதிகள் இன்று காணப்படுவது
(1) கிழக்கு ஆபிரிக்கப் பகுதியில்
(2) மத்திய தரைக்கடல் பகுதியில்
(3) பசுபிக்கின் நெருப்பு வளையப் பகுதியில்
(4) அத்திலாந்திக் மத்திய சமுத்திரப் பாறைத்தொடர் பகுதியில்
(5) கலிபோர்ணியா, சண்அன்ரி, யாக்குறைப் பகுதியில் (…...)

15. விசுவியஸ், எட்னா, கெக்லா, பியூஜிமா போன்ற எரிமலைகள் காணப்படும் பகுதிகள் முறையே
(1) சிசிலி, இத்தாலி, ஐஸ்லாந்து, ஜப்பான்
(2) பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சிசிலி, இத்தாலி
(3) இத்தாலி, சிசிலி, ஐஸ்லாந்து, ஜப்பான்
(4) சிசிலி, ஐஸ்லாந்து, ஜப்பான், பிலிப்பைன்ஸ்
(5) இத்தாலி, சிசிலி, பிலிப்பைன்ஸ், ஜப்பான் (…...)

16. ஆற்றுச் சிறை என்பது
(1) பிரதான ஆறு பல சிறிய ஆறுகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு செல்வது
(2) பிரதான ஆறு கடலோடு கலக்கும் பகுதியில் பல கிளையாறுகளாகப் பிரிந்து செல்வது
(3) ஆறு தான் பாயும் பிரதேசத்தில் பாரிய வளைவுகளை உருவாக்கிக் கொண்டு செல்வது
(4) பாலைவனப் பிரதேசங்களில் நீரரிப்பினால் உருவாகின்ற ஓர் நிலவுருவம்
(5) ஆறு பாய்ந்து செல்லும் பகுதிகளில் பல மணற்றிடர்களை உருவாக்கிக் கொள்வது. (…...)

17. மலைப்பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகிய நிலவுருவங்கள் இரண்டு
(1) குத்துப்பாறை வாற்குன்று, நுழைகளி
(2) குவடு, அலைவெட்டிய மேடை
(3) தொம்போலோ, தீவுகள்
(4) கூம்பகச்சிகரம், தொங்குபள்ளத்தாக்கு
(5) கூர்நுனி உச்சி, வில்வளைவு (…...)

18. கரையோரத்தில் உள்ள தீவுகளையும் கடற்பகுதியில் இருக்கின்ற தீவுகளையும் இணைக்கின்ற மணற்பகுதி
(1) சேற்றுநிலம் (2) கூழாங்கல் நாக்கு (3) மணற் கடற்கரை
(4) மணல்படிவு (5) தொம்போலோ (…...)

19. 20,000 - 40,000 அடிகளுக்கு இடையே பரந்து காணப்படும் முகில்
(1) கீற்று முகில் (2) திரள் முகில் (3) நடுத்தர முகில்
(4) கீழ்முகில் (5) உயர் முகில் (…...)

20. இலங்கையில் வடகீழ்ப்பருவக்காற்று வீசும் காலம்
(1) மே – செப்ரம்பர் (2) டிசம்பர் - பெப்ரவரி (3) நவம்பர் - டிசம்பர்
(4) ஜனவரி – மார்ச் (5) மார்ச் - ஏப்ரல் (…...)

21. சமுத்திரநீரின் வெப்பநிலை அதிகமாதல் வளியமுக்கம் மற்றும் காற்றின் போக்கில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகத் தோற்றம் பெறுவது
(1) எல்நினோ (2) லாநினோ (3) அமிலமழை
(4) சூறாவளி (5) சுனாமி (…...)

22. வளிக்கோளத்தில் காபனீரொட்சைட்டின் அளவு ஏறத்தாழ 30% ஆக அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்திய முதன்மையான துறைகள் இரண்டு
(1) விவசாயம், வலுச்சக்தி
(2) காடழிப்பு, விவசாயம்
(3) கைத்தொழில், போக்குவரத்து
(4) கைத்தொழில், விவசாயம்
(5) காடழிப்பு, கைத்தொழில் (…...)

23. இலங்கையின் உள்ளக நீர்த்தேக்கங்கள் அதிகளவில் பரந்துள்ள மாகாணம்
(1) வடமாகாணம்
(2) தென்மாகாணம்
(3) மேல்மாகாணம்
(4) வடமத்தியமாகாணம்
(5) கிழக்கு மாகாணம் (…...)

24. உலகின் மிகவும் குளிரான உயிர்ப்பெருந்திணிவு எது?
(1) அயனமழைக் காட்டு உயிர்ப்பெருந்திணிவு
(2) பாலைவன உயிர்ப்பெருந்திணிவு
(3) மத்திய தரைக்காட்டு உயிர்ப்பெருந்திணிவு
(4) இடைவெப்ப வலயக்காட்டு உயிர்பெருந்திணிவு
(5) துந்திரா உயிர்ப்பெருந்திணிவு (…...)

25. பின்வருவனவற்றில், இலங்கையின் ஈரப்பத்தனா புல்நிலங்கள் பரந்துள்ள இரண்டு பிரதேசங்கள்
(1) வெலிமடை உயர்நிலம், பண்டாரவளை
(2) ஹோட்டன் சமவெளி, கந்தபொல
(3) கல்லோயா, அம்பேவெல
(4) சந்ததென்ன, பொலன்னறுவை
(5) சோமாவதி, வில்பத்து (…...)

26. நகரப் பகுதிகளில் உயர்குடிசன அடர்த்திக்கான காரணம்
(1) விவசாயத்திற்கான அதிகளவு நிலம், குறைந்த சனத்தொகை
(2) குறைந்த சனத்தொகை, குறைந்தளவு விவசாயநிலம்
(3) சேவை, கைத்தொழில் நடவடிக்கைகள்
(4) கைத்தொழில், அதிகரித்த விவசாய நடவடிக்கைகள்
(5) சேவை, விவசாய நடவடிக்கைகள் (…...)

27. உலகின் குடித்தொகை அடர்த்தி கூடிய மூன்று வலயங்கள் அமைந்துள்ள கண்டம் எது?
(1) ஆபிரிக்கா
(2) ஐரோப்பா
(3) வடஅமெரிக்கா
(4) ஆசியா
(5) தென்அமெரிக்கா (…...)

28. ஒரு நாட்டின் உற்பத்திச் செயற்பாடுகளை விட நுகர்வு மீது அதிக செல்வாக்குச் செலுத்தும் வயதுத் தொகுதியினர்
(1) 0 – 10
(2) 16 – 21
(3) 25 – 40
(4) 40 – 50
(5) 60 – 80 (…...)

29. பருமட்டான இறப்பு வீதம் மிகக் குறைவாகக் காணப்படும் மத்திய கிழக்கு நாடு
(1) சவுதி அரேபியா
(2) ஈரான்
(3) ஈராக்
(4) கடார்
(5) குவைத் (…...)

30. பருவகால, தற்காலிக குடியிருப்புக்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய விவசாய நடவடிக்கைகள்
(1) மீன்பிடி, நெற்செய்கை
(2) வேட்டையாடுதல், சேனைப்பயிர்ச்செய்கை
(3) சேனைப்பயிர்ச்செய்கை, கால்நடைவளர்ப்பு
(4) கால்நடைவளர்ப்பு, மீன்பிடி
(5) மீன்பிடி, வேட்டையாடுதல் (…...)

31. பின்வருவனவற்றிலிருந்து நகரக் குடியிருப்பு வகைகைளத் தெரிவு செய்க.
(1) தனித்த வீடு, சிறிய கிராமம், கிராமம்
(2) நகரம், பொருநகரம், நகரச்சூழல்
(3) நகரச்சூழல் தனித்தவீடு, சிறிய நகரம்
(4) சிறிய நகரம், நகரம், பெருநகரம்
(5) நகரச்சூழல், சிறிய கிராமம், தனித்த வீடு (......)

32. இலங்கையில் உள்ள நிட்டம்புவ, மினுவாங்கொட, அதுருகிரிய, ஹோமாகம போன்றன
(1) கிராமங்கள்
(2) நகரங்கள்
(3) வரலாற்று நகரங்கள்
(4) சேவைநகரங்கள்
(5) கிராமநகர வலயங்கள் (......)

33. நகராக்கம் மீது அதிகளவில் செல்வாக்குச் செலுத்தும் காரணி
(1) கிரம நகர மக்கள் இடப்பெயர்வு
(2) கிராமிய அபிவிருத்தித்திட்டங்கள்
(3) நகர கைத்தொழில் விருத்தி
(4) வேலையின்மைப் பிரச்சினை
(5) பிறப்பு வீதம் (......)

34. சிறிய தாவரங்களாகக் காணப்படல், அதிக மழை, களைகளைத் தாங்குதல், கடுங்காற்றினை எதிர் கொள்ளல் போன்ற பண்புகள் காணப்படுவது
(1) கலப்பாக்கம் செய்யப்பட்ட விதைகளில்
(2) இரட்டைக் கலப்பாக்கம் செய்யப்பட்ட விதைகளில்
(3) மரபணுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட தாவரங்களில்
(4) சேதன விவசாய முறையைப் பின்பற்றி செய்கைபண்ணப்படும் தாவரங்களில்
(5) மண்முகாமைத்துவத்தினைப் பின்பற்றி வளர்க்கப்படும் தாவரங்களில் (......)

35. இலங்கையில் உயர்நிலங்களுக்கு நீர் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நீர்பாசன முறை
(1) புவியீர்ப்பு நீர்ப்பாசனம்
(2) நுண்நீர்ப்பாசனம்
(3) மேலேற்று நீர்ப்பாசனம்
(4) சொட்டு நீர்ப்பாசனம்
(5) தூவல் நீர்ப்பாசனம் (......)

36. கனிய எண்ணையை பிரதானமாக உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்கின்ற இரண்டு நாடுகள்
(1) ஐக்கிய அமெரிக்கா, சீனா
(2) இந்தியா, ஜப்பான்
(3) பிரித்தானியா, ஜேர்மனி
(4) தென்கொரியா, சிங்கப்பூர்
(5) ஜேர்மனி, சவுதி அரேபியா (......)

37. இலங்கையின் காரியக்கைத்தொழிலின் உற்பத்திச் செலவு அதிகரிக்கக் காரணம்
(1) காரியக் கைத்தொழிலில் தனியார் துறையினர் ஈடுபட்டுள்ளமை
(2) காரியம் மூலப் பொருளாக அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றமை
(3) சுரங்கங்களில் கனியப் படிவுகள் மிக ஆழத்தில் காணப்படுகின்றமை
(4) உயர்வான பொருளாதார பெறுமதியை கொண்டிருக்கின்றமை
(5) சக்திக் கனியமாகக் காணப்படுகின்றமை (......)

38. பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டுவரும் தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்தி இலங்கையில் அமைவு பெற்றுள்ள கைத்தொழில்
(1) இறப்பர் கைத்தொழில்
(2) மட்பாண்டக் கைத்தொழில்
(3) பாரம்பரிய கைவினைக் கைத்தொழில்
(4) ஆடைக் கைத்தொழில்
(5) சீனிக் கைத்தொழில் (......)

39. இலங்கையில் சுற்றுலா மூலம் பிரதேச அபிவிருத்தி ஏற்பட்டுள்ள இரண்டு இடங்கள்
(1) பின்னவல, தம்புள்ள
(2) கன்னெலிய, குமண
(3) யாழ்ப்பாணம், இரத்தினபுரி
(4) கதிர்காமம், வவுனியா
(5) பாசிக்குடா, முல்லைத்தீவு (......)

40. குறைவிருத்தியுடைய நாடுகள் உலகசந்தைக்குள் செல்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தது.
(1) பொருளாதாரக் கூட்டுக்கள்
(2) விருத்தியடைந்த நாடுகள்
(3) G – 7 நாடுகள்
(4) பூகோளமயமாதல்
(5) நாடு காண்பயணங்கள் (......)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி II இரண்டில் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

*1.* இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1: 50000** என்னும் அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் ஒருபகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி **20** மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை எழுதுக.

**குறிப்பு :**

✶ படத்தில் விடைகள் எழுதப்படலாகாது.

✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் விடைத்தாளில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

✶ உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படத்தில் காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லையைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(ii) நாற்பக்கல் C,D ஆகியவற்றில் காணப்படும் குடியிருப்புப் பாங்குகளைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(iii) E,F,G,H ஆகிய எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள இடங்களில் காணப்படும் நான்கு நிலப்பயன்பாட்டு வகைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) படப்பகுதியிலுள்ள விவசாய நிலப்பயன்பாடு தொடர்பாக இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(04 புள்ளிகள்)*

(v) பிபிலைநகரப் பகுதியில் காணப்படும் பொதுச் சேவை நிலையங்கள் ஆறினை (06) பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(vi) படப்பகுதியில் காணப்படும் வடிகால்பாங்கினை சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

(vii) படப்பகுதியின் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதிகளில் காணப்படும் குடியிருப்புக்கள், வீதிவலைப்பின்னல், தரைதோற்ற அம்சங்கள் ஆகியவற்றை ஒப்பீட்டுரீதியாக விவரிக்குக. *(06 புள்ளிகள்)*

*2.* தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) அந்தீஸ்மலைத்தொடர்

(ii) மிசூரி மிசிசிப்பி நதி

(iii) கடகக் கோடு

(iv) நுல்லபார் சமவெளி

(v) மகலன் தொடுகடல்

(vi) பால்டிக் கடல்

(vii) லண்டன்

(viii) அரேபியன் பாலைவனம்

(ix) *2014 ஆம் ஆண்டின் தரவின்படி தென் ஆசியாவில் குறைவான நகராக்கத்தினைக் கொண்டுள்ளநாடு*

(x) Cop 26 *மகாநாடு 2021 நவம்பரில் ஆரம்பமான நகரம் எது?*

*3.* (i) *பின்வரும்* A – D *வரை தரப்பட்ட விடயங்களை வரைபுகளாக வரைந்து காட்டுவதற்கு மிகப்பொருத்தமான வரைபட நுட்ப முறைகளைப் பெயரிடுக.*

A- *உலகநாடுகளின் குறித்த வருடத்திற்குரிய நகரசனத்தொகை*

B- *ஒரு நாட்டின் குடிவரவு, குடியகல்வு*

C- *நாடு ஒன்றின் பால் விகிதம், வயதுக்கட்டமைப்பு*

D- *நாடு ஒன்றின் இனரீதியான பரம்பல்* *(02 புள்ளிகள்)*

(ii) *வரைபு ஒன்றில் உள்ளடக்கப்படவேண்டிய அடிப்படை அம்சங்கள் நான்கினைத் தருக.* *(02 புள்ளிகள்)*

(iii) *வட்ட வரைபுகளை அமைக்கும் போது பின்பற்ற வேண்டிய மூன்று நுட்பமுறைகளை புனையா வரைபடத்தின் மூலம் சுருக்கமாக விளக்குக.* *(06 புள்ளிகள்)*

(iv) *சம கணிய, இடக்கணியப்படங்களின் பயன்களை இரண்டு காரணிகளினூடாக விளக்குக.* *(05 புள்ளிகள்)*

*4.* (i) *பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை* (GPS) *என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)*

(ii) *பூகோள இடநிலைப்படுத்தல் முறை மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்ற மூன்று முறைகளையும் விளக்குக.* *(05 புள்ளிகள்)*

(iii) *பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை* (GPS) *இன் மூன்று பயன்பாடுகளை விபரிக்குக.* (04 *புள்ளிகள்)*

(iv) *தொலையுணர்வு தொழில்நுட்ப செயற்பாடுகளில் தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற*

A – *வான்வழி ஒளிப்படத் தொழில்நுட்பம்*

B – *செய்மதித் தொழில்நுட்பம்*

*போன்ற முறைகளைச் சுருக்கமாக விளக்குக.* *(04 புள்ளிகள்)*

*5.* (i) *தரவு வரிசை* (Data Array) *என்பதனால் கருதப்படுவது யாது?* *(02 புள்ளிகள்)*

(ii) *திரட்டு மீடிறன் கணிக்கப்படுவதற்கான காரணம் யாது?* *(03 புள்ளிகள்)*

(iii) *சதவீத திரட்டு மீடிறன் வளையி என்பதனைச் சுருக்கமாக விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(iv) *இடைவிலகல் கணிப்பிடப்படுவதன் நோக்கத்தைக் குறிப்பிடுவதுடன் புனையா வரைபடத்தின் மூலம் விலகல் வரைபினை வரைந்து காட்டுக.* *(06 புள்ளிகள்)*

6. அட்டவணை *1* இல் இலங்கையின் பிறப்பு, இறப்பு, சிசுமரணவீதம் தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை *1*

**இலங்கையின் பிறப்பு, இறப்பு, சிசுமரண வீதம் 2009 – 2018**

| ஆண்டு | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் | சிசுமரண வீதம் |
|---|---|---|---|
| 2009 | 18.0 | 6.2 | 10.3 |
| 2010 | 17.6 | 6.3 | 10 |
| 2011 | 17.3 | 5.9 | 9.6 |
| 2012 | 17.6 | 6.0 | 9.1 |
| 2013 | 17.8 | 6.2 | 8.6 |
| 2014 | 16.8 | 6.2 | 8.0 |
| 2015 | 16.0 | 6.3 | 7.5 |
| 2016 | 15.6 | 6.2 | 7.0 |
| 2017 | 15.2 | 6.5 | 6.7 |
| 2018 | 15.1 | 6.4 | 6.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2019

(i) அட்டவணை *1* இல் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பல்கோட்டு வரை (comparative line graph) ஒன்றினை வரைக. *(06 புள்ளிகள்)*

(ii) மேற்படி வரைபின் போக்குகளைப் பரிசீலிக்க. *(03 புள்ளிகள்)*

(iii) கோட்டு, பல்கோட்டு வரைபின் மூலம் எடுத்துக் காட்டக்கூடிய தரவு வகைகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(iv) பல்கோட்டு வரைபின் நன்மைகள் மூன்றும் தீமைகள் இரண்டும் தருக. *(04 புள்ளிகள்)*

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
6th Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - II<br>Geography - II | Three Hours<br>Gr. 13 (2021) | 22 | T | II |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I பௌதிகப் புவியியல்

*1.* (i) வளிமண்டலத்தின் பிரதான படைகளைக் காட்டும் உருவப்படத்தின் மாதிரியை வரைந்து அதன் படைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*


(ii) மேலே (i) வரைந்து பெயரிடப்பட்ட வளிமண்டலத்தின் படைகளில் இரண்டின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) காலநிலை மாற்றத்தில் பங்களிப்புச் செய்யும் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பிற்குக் காரணமான மூன்று மானிட நடவடிக்கைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட விளைவுகளை இழிவளவாக்குவதற்கு உலக நாடுகள் மேற்கொண்டுவரும் மூன்று நடவடிக்கைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

*2.* (i) a) தரப்பட்ட உலகப்படத்தில் A – D வரை குறித்துக் காட்டப்பட்டிருக்கும் புவித்தகடுகளைப் பெயரிடுக.

*(02 புள்ளிகள்)*




b) புவித்தகடுகள் அசைவதற்கான காரணங்களைச் சுருக்கமாக குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) புவித்தகடுகள் அசைவிற்கு உட்படுகின்ற மூன்று முறைகளையும் விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) அமுக்க விசையினால் உருவாகின்ற இரண்டு நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இழுவிசையினால் உருவாகின்ற இரண்டு நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

*3.* (i) பாலைவனப் பிரதேசத்தின் பண்புகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) பாலைவனப் பிரதேசங்களில் காற்றின் மூன்று அரித்தல் செயல்முறைகளையும் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) காற்றின் அரித்தலினால் உருவாகும் மூன்று நிலவுருவங்களை விளக்கப் படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) காற்று அரித்த பருப் பொருட்களைக் கொண்டு செல்லும் மூன்று முறைகளை விளக்கு. *(06 புள்ளிகள்)*

*4.* (i) இலங்கையின் காலநிலை வலயங்கள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கை மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்கின்ற இரண்டு முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் அயனவலய மழைக்காடுகள் என்ற சூழல் தொகுதியின்

*1.* பரம்பல் *2.* காலநிலை *3.* தாவரங்கள் / விலங்குகள்

என்ற தலைப்பின் கீழ் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் சூழல் தொகுதிகள் எதிர்நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

## பகுதி - II மானிடப்புவியியல்

அட்டவணை I இல் குறைந்த நகராக்கமட்டத்தினை உடைய *10* நாடுகளின் *2014, 2050* ஆண்டுகளின் நகராக்க வீதம் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை -I குறைந்த நகராக்கமட்டத்தினை உடைய நாடுகள் 2014, 2050**

| தொடர் இல | நாடுகள் | நகராக்க வீதம் *2014* | தொடர் இல | நாடுகள் | நராக்க வீதம் *2050* |
|---|---|---|---|---|---|
| *1.* | டிரிடேட்டுபகோ | 8.6 | *1.* | டிரிடேட்டுபகோ | 10.7 |
| *2.* | புருண்டி | 11.8 | *2.* | பப்புவாநியூகினியா | 22.7 |
| *3.* | பப்புவாநியூகினியா | 13.0 | *3.* | செமோவா | 23.4 |
| *4.* | உகண்டா | 15.8 | *4.* | சென்லூசியா | 25.0 |
| *5.* | மலாவி | 16.1 | *5.* | புருண்டி | 26.3 |
| *6.* | நேபாளம் | 18.2 | *6.* | என்டிகுறா | 26.3 |
| *7.* | இலங்கை | 18.3 | *7.* | சுவாசிலாந்து | 28.8 |
| *8.* | நைகர் | 18.5 | *8.* | இலங்கை | 30.2 |
| *9.* | சென்லூசியா | 18.5 | *9.* | மலாவி | 30.2 |
| *10* | தென்சூடான் | 18.6 | *10* | மய்ரோனீசியா | 30.2 |

*மூலம் : ஐக்கியநாடுகள் நகரமயப்படுத்தல் அறிக்கை 2015*

5. (i) a) அட்டவணை *1* இல் காணக்கூடிய நான்கு பண்புகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

b) அட்டவணை *1* இன்படி *2014, 2050* ஆகிய ஆண்டுகளின் குறைந்த நகராக்கமுடைய நாடுகளின் போக்கில் காணப்படும் நான்கு வேறுபாடுகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் நகராக்கத்துடன் தொடர்புடைய மூன்று சிக்கல்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) இலங்கையில் கிராமிய சனத்தொகை அதிகளவில் காணப்படுவதற்கான மூன்று காரணிகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகர சனத்தொகை அதிகரிப்பதனால் ஏற்படும் மூன்று பிரச்சினைகளை இனம் கண்டு விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) சேதன விவசாயம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) சேதன விவசாயத்தில் பின்பற்றப்படும் மூன்று முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) சேதனப்பயிர்ச் செய்கையின் சுற்றாடல் சமூகம் சார்ந்த நன்மைகள் மூன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) விவசாயத்தில் பின்பற்றப்படுகின்ற மரபணு தொழில்நுட்பத்தின் மூன்று பண்புகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) விவசாயம் சார் கைத்தொழில் என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

(ii) உலகின் பெற்றோலியப் படிவுகளின் புவியியல் ரீதியான பரம்பல் பாங்கில் காணப்படும் மூன்று முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) உலகின் பெற்றோலிய வர்த்தகத்தில் காணப்படும் மூன்று போக்குகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையில் கனிய வளங்களின் பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள மூன்று சூழல் சார் பிரச்சினைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

8. (i) உலகில் பிராந்திய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமைக்கான காரணம் யாது? *(02 புள்ளிகள்)*

(ii) தென்னாசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு (SAARC) இன்

*1.* உருவாக்கம், அங்கத்துவ நாடுகள்

*2.* ஒத்துழைப்பு வழங்குகின்ற துறைகள்

*3.* நோக்கம் என்பன தொடர்பாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) ஐரோப்பிய ஒன்றியத்தின்

a- ஆரம்ப அங்கத்துவ நாடுகள் இரண்டு

b- நோக்கம்

என்பவற்றைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iv) பிராந்திய அமைப்புக்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை நான்கு காரணிகளின் அடிப்படையில் உதாரணங்களுடன் விபரிக்குக. *(08 புள்ளிகள்)*